# வருடாந்த நிகழ்ச்சிகள் மற்றும் முன்னேற்ற அறிக்கை

# 2015

## இந்துசமய,கலாசாரஅலுவல்கள் திணைக்களம்

இல. 248 – 1.˙.1, காலி வீதி, கொழும்பு- 04

**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சு**

இல. 146, காலி வீதி, கொழும்பு – 03

| இலக்கம் | உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|---|
| **0.1** | **இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்** | 05 |
| 1.1 | அறிமுகம் | |
| 1.2 | தொலைநோக்கு | |
| 1.3 | செயற்பணி | |
| 1.4 | குறிக்கோள்கள் | |
| 1.5 | பிரதான செயற்பாடுகள் | |
| **2.0** | **நிகழ்ச்சிகள் மற்றும் செயலாற்றுகை பற்றிய அறிக்கை** | 06 |
| 2.1 | அறிமுகம் | |
| 2.2 | நிகழ்ச்சித் திட்டங்கள் | |
| **3.0** | **இந்துசமய அறநெறிக் கல்வி அபிவிருத்தி** | |
| 3.1 | தர்மாசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளும், பயிற்சிப் பட்டறைகளும் | |
| 3.2 | அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி மற்றும் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை | |
| 3.2.1 | "தேசிய ஆக்கத்திறன் போட்டி" | |
| 3.2.2 | பொது அறிவுப் போட்டிப் பரீட்சை" | |
| 3.2.3 | "அருள்நெறிவிழா" 2015 | |
| 3.3 | இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக் கொடுப்பனவு | |
| 3.4 | இசைக்கருவி கொள்வனவும் விநியோகமும் | |
| 3.5 | அறநெறிப்பாடசாலை ஆசிரியர்இமாணவர்களுக்கு சீருடைக் கொள்வனவு | |
| 3.6 | பண்ணிசை வகுப்புகள் | |
| 3.7 | அறநெறிப்பாடசாலை அபிவிருத்திக்கான மூலதனக் கொடுப்பனவு | |
| 3.8 | அறநெறிப் பாடசாலை மாணவர்களின் துணைநூற் பயன்பாட்டிற்கெனப் பின்வரும் இந்து சமய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன | |
| 3.9 | அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள், பதிவேடுகள் அச்சிடல்.:.வழங்கல் | |
| 3.10 | இந்து இளைஞர்களுக்கான ஆன்மீக தலைமைத்துவப் பயிற்சி | |
| **4.0** | **இந்துசமய மேம்பாடு** | 13-19 |
| 4.1 | இந்துசமய விரிவுரைகள் | |
| 4.2 | குருபூஜைகள் | |
| 4.3 | இந்து சமய விழாக்கள் | |
| 4.3.1 | தைப்பொங்கல் விழா | |
| 4.3.2 | மகா சிவராத்திரி விழா | |
| 4.3.3 | புதுவருடப்பிறப்பு விழா | |
| 4.3.4 | நவராத்திரி விழா | |
| 4.4 | புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டம் | |
| 4.5 | நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும் வகுப்புக்கள் | |
| 4.6 | இந்து கலாசார நிலையம் நாவற்குடா, மட்டக்களப்பு | |
| 4.7 | ஏனைய விழாக்கள் | |
| 4.7.1 | அதி வணக்கத்துக்குரிய பாப்பரசர் 16வது பிரான்சிஸின் வருகை | |
| **5.0** | **இந்து சமய கலாசார ஆராய்ச்சி தமிழ்க்கலை** | 20-22 |
| 5.1 | இந்து சமய ஆராய்ச்சிக் கருத்தரங்கு | |

5.1.1 மட்டக்களப்பில் திருமுறைமாநாடு
5.1.2 ஆய்வரங்கு கட்டுரைத் தொகுப்பு, சிறப்புமலர், இலங்கைதமிழ் வழக்குச்சொற்கள், பஞ்சாங்கம், பண்பாடு ஆகிய நூல்களின் வெளியீடு
5.2 சமஸ்கிருத மொழி வகுப்புக்கள்
5.3 சாசனவியல் பயிலரங்கு
5.4 ஆராய்ச்சிக் கூட்டங்களும் கலந்துரையாடல்களும்

**6.0 இந்துக் தமிழ்க்கலை கலாசார மேம்பாடு** 23-24

6.1 இலங்கை எழுத்தாளர்களிடமிருந்து நூல்களைக் கொள்வனவு செய்தல்
6.2 நாட்டுப்புறக் கலைமேம்பாடு
6.3 கலாபூ'ணம் விருது 2015

**7.0 இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தி** 25-26

7.1 மூலதன செலவினத்தின் கீழ் ஆலயங்களுக்கான நிதியுதவி
7.1.1 இந்து ஆலயங்களுக்கு புனரமைப்புக்கான நிதியுதவி (வடக்கு)
7.1.2 இந்து ஆலயங்களுக்கு புனரமைப்புக்கான நிதியுதவி (கிழக்கு)
7.1.3 இந்து ஆலயங்கள், நிறுவனங்களுக்கு புனரமைப்புக்கான நிதியுதவி (வடக்கு, கிழக்கு தவிர்ந்த)
7.1.4 இந்து ஆலயங்களுக்கான அடித்தள வசதி மேம்பாடு
7.2 மீண்டுவரும் செலவினத்தின் கீழ் இந்து ஆலயங்களுக்கான நிதியுதவி
7.2.1 கும்பாபி'ேகத்திற்கான நிதியுதவி
7.2.2 இந்து சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான நிதியுதவி
7.2.3 நந்திக் கொடிகள் அச்சிடலும் விநியோகமும்

**8.0 இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பான தரவுகள்** 29-31

8.1 நிதி முன்னேற்ற நிலைமை 2015
8.2 பிரிவுகள் ரீதியிலான நிதி முன்னேற்றம் 2015
8.3 திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்து ஆலயங்கள், இந்துசமயநிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள்
8.4 ஆளணி விபரம் - 2015 (2015 டிசம்பர் 31ஆம் திகதி வரை)

**9.0 இந்துப் பண்பாட்டு நிதியம்** 32

9.1 அறிமுகம்
9.2 நிதி நிலை
9.3 இந்துப் பண்பாட்டு நிதியம் - செயற்றிட்டங்கள் 2015

**10.0 திணைக்களத்தின் அடைவுகள்** 33-34

10.1 தேசிய உற்பத்தித்திறன் விருது 2014
10.2 தேசிய உற்பத்தித் திறன் விருதிற்கான பாராட்டு வைபவம்

## பணிப்பாளரின் செய்தி



1986 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமானது இலங்கையில் இந்து சமயத்தையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாத்தலும் மேம்படுத்திப் பரப்புதலும் என்ற தொலைநோக்கோடு செயற்பட்டு வருகின்றது. இத் திணைக்களமானது தற்போது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு. புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கீழ் இயங்கி வருகிறது.

திணைக்களம் தனது செயற்பாடுகளை மெருகூட்டும் நோக்குடன் ஐஎஸ்ஓ - 9001 தரக்கட்டுப்பாடு நியமங்களை நடைமுறைப்படுத்தியதன் ஊடாகவும் உற்பத்தித்திறனை விருத்தி செய்தும் 2015இல் தனது சேவை வினைத்திறன் மற்றும் தரம் என்பவற்றை அதிகரித்துக் கொண்டது. திறமையான தலைமை மற்றும் அனைத்து ஊழியர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு காரணமாகவே இத்தரமான அடைவினை அடைய முடிந்தது.

2015 இல் காணப்பட்ட அரச கொள்கைகளின் பிரகாரம் எமது திணைக்களத்திலிருந்து எதிர்பார்க்கப்பட்ட பங்களிப்பு வினைத்திறனாகவும் உற்பத்தித்திறன் மிக்கதாகவும் அடையக்கூடியதாக இருந்தது என்பதை கூறுவதில் பெருமையடைகின்றேன். வருடத்தின் 365 நாட்களும் ஆற்றப்பட்ட செயற்பாடுகளை குறிப்பிடுவது கடினமாக இருந்த போதும் நிருவாக மற்றும் நிதி செயற்திறனை இங்கு சுருக்கமாக வெளியிடுவதற்கு முயற்சிக்கப்பட்டுள்ளது.

இவ்வேளையில் எமது திணைக்கள செயற்பாடுகளுக்கு முழு ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கிய அனைவருக்கும் முக்கியமாக கௌரவ அமைச்சர்கள், கௌரவ பாராளுமறன்ற உறுப்பினர்கள், கௌரவ மாகாணசபை உறுப்பினர்கள், அரச நிறுவனங்கள் மற்றும் இந்து சமய துறவிகள் மதகுருமார்கள், நிறுவனங்கள், அறநெறி பாடசாலைகள் உள்ளிட்ட அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

எமது திணைக்களத்தின் பொறுப்புக்களை வெற்றிகரமாக செய்வதற்கு எமது முயற்சியின் மூலம் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு. புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் மற்றும் அலுவலர்களின் முழு ஒத்துழைப்பையும் பெற்றுக்கொள்ள முடிந்தமையையிட்டு நாம் மிகவும் அதி'டசாலிகளாகவுள்ளோம். ஆகையால் அமைச்சின் செயலாளர் மற்றும் அலுவலர்களுக்கு அவர்களது பாரிய ஒத்துழைப்பிற்காக எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

2015 இல் எமது இலக்கை அடைவதற்கு பங்களிப்பு வழங்கிய திணைக்கள முகாமைத்துவ அலுவலர்களையும் ஏனைய அலுவலர்களையும் அவர்களது சேவைக்காக பாராட்டுகிறேன். எனது நன்றிக்கு அவர்கள் தகுதியானவர்கள் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை.

**அ.உமாமகேஸ்வரன்**
**பணிப்பாளர்**

# 1.0 இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்

## 1.1 அறிமுகம்

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து சமயத்தை மேம்படுத்துதல், பெருக்குதல், பேணிப்பாதுகாத்தல் போன்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு 1986 ஜனவரி 01ஆம் திகதியன்று ஸ்தாபிக்கப்பட்டது.

## 1.2 தொலைநோக்கு

இந்துசமயத்தையும் பண்பாட்டையும் பேணிப் பாதுகாத்தலும், மேம்படுத்திப் பரப்புதலும்

## 1.3 செயற்பணி

இந்துசமயம், இந்துசமயக் கல்வி, இந்து கலாசாரம், கலைகள் ஆகியவற்றின் பேணுகை, ஊக்குவிப்பு, பெருக்குதல் மற்றும் கோவில்களின் புனரமைப்பு.

## 1.4 குறிக்கோள்கள்

- ஒழுக்க விழுமியங்களையும்,சமயப் பெறுமானங்களையும் இந்துச் சிறார்களுக்கிடையே ஊக்குவிப்பதற்காக இந்துசமயக் கல்வியை ஊக்குவித்தல்
- இந்துசமயத்தையும் கலாசாரத்தையும் அபிவிருத்தி செய்து பேணுவதற்காக இந்துசமய ஆசாரங்களைப் பேணுதல்
- இந்துசமய கலாசார ஆராய்ச்சியை அபிவிருத்தி செய்தல்
- இந்துசமய, கலை மற்றும் கட்டிடக்கலை தொடர்பான உயர்ந்த எண்ணத்தினை பொதுமக்களிடையே பரப்புதல்

## 1.5 பிரதான செயற்பாடுகள்

- இந்து ஆலயங்கள் புனரமைப்பு
- இந்துக் குருமார்களுக்கான பயிற்சி
- நாயன்மார்களின் குருபூஜைகளை அனு'டித்தல் மற்றும் இந்து சமயச் சொற்பொழிவுகள் மற்றும் பாரம்பரிய மரபுகளைப் பேணிக்காத்தல்
- இந்து அறநெறிப் பாடசாலைகளில் இந்துசமயக் கல்வியை மேம்படுத்தலும் சமய விழுமியங்களைப் பேணுவதற்கு ஊக்கமளித்தலும்
- இந்துக் கலைக் களஞ்சியங்களின் தொகுப்பு
- இந்து ஆராய்ச்சி நூலகத்தின் நிர்வாகம்
- இந்துசமய, தமிழ்க் கலாசார ஆய்வுகளை மேற்கொள்ளல்
- இந்துசமய தமிழ்க் கலைகளைப்பேணுதல்
- கதிர்காமம் இந்து யாத்திரிகர் விடுதியின் முகாமைத்துவம்
- மட்டக்களப்பு இந்து கலாசார நிலையத்தின் முகாமைத்துவம்
- யாழ்ப்பாணம், ஆனைப்பந்தி குருகுல கட்டட முகாமைத்துவம்
- யாழ்ப்பாணம், நல்லூர் நாவலர் மணிமண்டபத்தின் முகாமைத்துவம்
- இந்து கலை கலாசாரத்தை பேணிப் பாதுகாத்தல்
- இந்துப்பண்பாட்டு நிதியச் சட்டத்தின் ஏற்பாடுகளை அமுலாக்கம் செய்தல்

## 2.0 நிகழ்ச்சிகள் மற்றும் செயலாற்றுகை பற்றிய அறிக்கை

**01.01.2015– 31.12.2015வரை**

### 2.1 அறிமுகம்

ஒழுக்க விழுமியங்கள் நிறைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்காக,அரசாங்கக் கொள்கைகளுக்கிணங்க இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் பின்வரும் நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

### 2.2 நிகழ்ச்சித் திட்டங்கள்

I. இந்துசமய அறநெறிக் கல்வி அபிவிருத்தி
II. இந்துசமய மேம்பாடு
III. இந்துசமய கலாசார ஆராய்ச்சி
IV. இந்துசமய, தமிழ்க்கலை கலாசார மேம்பாடு
V. இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தி

2015 ஆம் ஆண்டு டிசம்பர்31ஆம் திகதி வரையான காலப் பகுதிக்குள் திணைக்களத்தின் மூலம் பின்வரும் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

## 3.0 இந்துசமய அறநெறிக் கல்வி அபிவிருத்தி

இளம் இந்துச்சிறார் மனதில், ஒழுக்க விழுமியங்கள்,மற்றும் நற்பண்புகளை வளர்த்தல், கடவுள் நம்பிக்கையுடன் பிரார்த்தனைகளை மேற்கொள்ள வழிகாட்டல், சமய அறிவை வளர்த்துக் கொள்வதற்கான போதனை என்பவற்றை வழங்கி ஒழுக்கநெறிமுறை சார்ந்த சமூகத்தை உருவாக்குதலே இந்துசமய அறநெறிக் கல்வியின் குறிக்கோளாகும்.

“கற்றால் மட்டும் போதாது அதன்படி ஒழுகுதல் வேண்டும்’’ என்கிற அறநெறிக் கல்வியின் அடிப்படை நோக்கத்திற்கமைவாக மனித விழுமியங்களை வளர்த்தெடுப்பதில் அறநெறிக்கல்வியானது கணிசமான செல்வாக்கை செலுத்துவதோடு, இம் மனித விழுமியங்களை வளர்த்தெடுப்பதற்குத் தடையாகவுள்ள சக்திகளை அகற்றி இளம் சிறார்களின் மனதில் உயர்ந்த சிந்தனைகளை ஊட்டுவதனூடாக நீதியீனம், பொய்மை, அவா, அழுக்காறு, ஒழுங்கீனம் ஆகியவற்றின் அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து அதனை வெற்றி கொள்வதனையே இவ் அறநெறிக்கல்வி தன் இலட்சியமாகக் கொண்டுள்ளது.

இந் நோக்கங்களை அடையும் பொருட்டு நாடளாவிய ரீதியில் இயங்கி வருகின்ற அறநெறிப்பாடசாலைகள் சிறந்த பங்களிப்பினை நல்கி வருகின்றன. இவ் அறநெறிப்பாடசாலைகளின் முன்னேற்றத்திற்கு எமது திணைக்களம் முனைப்பான பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளை நடாத்துதல், மாணவர்களுக்கான பொது அறிவுப் போட்டி,ஆக்கத்திறன் போட்டிகளை பிரதேச, மாவட்ட, தேசிய மட்டங்களில் நடாத்தி பரிசளிப்பு வைபவங்களை ஒழுங்கமைத்து ஊக்குவித்தல், தெய்வீக அன்புச் சிறுவர்கள் திட்டம், ஆன்மீக தலைமைத்துவப் பயிற்சியினை வழங்குதல்,அறநெறிப் பாடசாலைகளுக்கான நூல்விநியோகம், சீருடைகளை வழங்குதல், அறநெறிப் பாடசாலைகளின் அடிப்படைத் தளபாடத் தேவைகளையும், கட்டட வசதிகளினையும் நிறைவேற்றிக் கொள்ள நிதியுதவி வழங்குதல் போன்றன பல செயற்றிட்டங்களை ஆற்றிவருகின்றது.

அதனடிப்படையில் இந்துசமய அறநெறிக் கல்விச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ள அனைத்துத் தரப்பினருக்கும் பயனளிக்கத் தக்க வகையில் இத் திணைக்களமானது, இந்துசமய அறநெறிக் கல்வி அபிவிருத்தித் திட்டம் பற்றிய அறிமுக விளக்கம்,இந்துசமய அறநெறிக் கல்வி, மற்றும் இந்துசமய அறநெறிப்பாடசாலைகளின் செயற்பாடுகள் தொடர்பான தெளிவான விளக்கங்களையும் உள்ளடக்கியதாக “ **இந்துசமய அறநெறிப் பாடசாலைகளுக்கான புதிய நடைமுறைகள்’’**எனும் புதிய நூலினை உருவாக்கியுள்ளது.



### 3.1 தர்மாசிரியர்கள்,அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்குகளும், பயிற்சிப் பட்டறைகளும்

தர்மாசிரியர்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் போதனை முறையை நெறிப்படுத்துவதற்காகவும், பாடத்திட்டத்தின் அடிப்படையினைத் தெளிவுபடுத்துவதற்காகவும், மாணவர்களுக்கான செயல்முறைக் கற்பித்தலை மேற்கொள்வதற்காகவும் மாவட்டங்கள் தோறும் வதிவிடப் பயிற்சிக் கருத்தரங்குகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இத்திட்டத்திற்காக ரூ 2.482 மில்லியன் செலவழிக்கப்பட்டது.

01.01.2015– 31.12.2015 ஆம் திகதி வரை திணைக்களத்தில்

- பதிவு செய்யப்பட்டுள்ள அறநெறிப்பாடசாலைகளின் எண்ணிக்கை - 1,999
- அறநெறிப் பாடசாலை மாணவர்களின் எண்ணிக்கை - 191,774
- அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை - 9,756

அட்டவணை - 3.I

**பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் விபரம்**

| இல | மாவட்டம் | 2015 இல் பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் விபரம் | | | 1986 தொடக்கம் 2015 வரை பதிவுசெய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகளின் விபரம் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை | பாடசாலைகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
| 1 | கொழும்பு | 2 | 84 | 4 | 94 | 10,514 | 807 |
| 2 | அம்பாறை | 3 | 170 | 12 | 117 | 17,103 | 958 |
| 3 | மட்டக்களப்பு | 15 | 1,762 | 65 | 234 | 30,218 | 1560 |
| 4 | கண்டி | 7 | 499 | 17 | 152 | 20,037 | 545 |
| 5 | நுவரெலியா | 15 | 1,133 | 41 | 156 | 14,663 | 583 |
| 6 | கேகாலை | 3 | 141 | 4 | 85 | 4,683 | 222 |
| 7 | பதுளை | 7 | 468 | 22 | 174 | 17,010 | 1021 |
| 8 | வவுனியா | 8 | 278 | 14 | 79 | 6,101 | 429 |
| 9 | புத்தளம் | 0 | - | - | 45 | 2,534 | 198 |
| 10 | கம்பஹா | 1 | 148 | - | 13 | 2,203 | 42 |
| 11 | திருகோணமலை | 7 | 212 | 73 | 115 | 13,138 | 681 |
| 12 | இரத்தினபுரி | 3 | 187 | 10 | 110 | 12,272 | 317 |
| 13 | மாத்தளை | 3 | 160 | 4 | 57 | 7,421 | 198 |
| 14 | யாழ்ப்பாணம் | 14 | 515 | 31 | 259 | 18,345 | 1130 |
| 15 | கிளிநொச்சி | 3 | 145 | 6 | 72 | 5,514 | 198 |
| 16 | முல்லைத்தீவு | 11 | 465 | 20 | 58 | 5,069 | 271 |
| 17 | களுத்துறை | 6 | 152 | 10 | 60 | 1,302 | 202 |
| 18 | குருநாகல் | 1 | - | 2 | 10 | 143 | 36 |
| 19 | அனுராதபுரம் | 0 | - | - | 1 | 363 | 5 |
| 20 | மொனராகலை | 0 | - | - | 5 | 121 | 15 |
| 21 | காலி | 0 | - | - | 8 | 346 | 12 |
| 22 | மன்னார் | 3 | 198 | 14 | 75 | 1,053 | 272 |
| 23 | பொலநறுவை | 0 | 0 | 0 | 6 | 968 | 23 |
| 24 | மாத்தறை | 0 | 0 | 0 | 14 | 653 | 31 |
| | **மொத்தம்** | **112** | **6,717** | **349** | **1,999** | **191,774** | **9,756** |

அட்டவணை – 03-II

| இல | நிகழ்ச்சியின் பெயர் | மாவட்டம் | பயனடைந்தோர் |
|---|---|---|---|
| 01. | தர்மாசிரியர் வதிவிடக் கருத்தரங்குகள் 03நடைபெற்றுள்ளன | அம்பாறை,கேகாலை,களுத்துறை, இரத்தினபுரிஇபொலநறுவை,மன்னார் | 387இந்து தர்மாசிரியர்கள் பயன்பெற்றனர். |
| 02. | அறநெறி ஆசிரியர்களுக்கான வதிவிடக் கற்பித்தல் முறைக் கருத்தரங்கு 06 நடத்தப்பட்டுள்ளன | பதுளை,அம்பாறை,பொலநறுவை,நுவரெலியா,யாழ்ப்பாணம்,கிளிநொச்சி,மட்டக்களப்பு , கண்டி,மாத்தளை,கொழும்பு, கம்பஹா, மாத்தறை, களுத்துறை,புத்தளம், குருநாகல்,இரத்தினபுரி, கேகாலை | 1315 இந்து அறநெறி ஆசிரியர்கள் பயன்பெற்றனர். |
| 03. | அறநெறி ஆசிரியர்களுக்கான 06இறுதிநிலைப் பரீட்சைக் கருத்தரங்குகள் நடத்தப்பட்டுள்ளன | கொழும்பு, கம்பஹா,வவுனியா,புத்தளம், | 460 இந்து அறநெறி ஆசிரியர்கள் பங்குபற்றி பயன் பெற்றனர் |
| 04 | அறநெறி ஆசிரியர்களுக்கான சான்றிதழ் பாடநெறி | யாழ்ப்பாணம், மட்டக்களப்பு | 380 இந்து அறநெறி ஆசிரியர்கள் பங்குபற்றி பயன் பெற்றனர் |

படங்கள் - I



நாவற்குடா இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்ற அறநெறி ஆசிரியர்களுக்கான வதிவிட கற்பித்தல் முறைக் கருத்தரங்கு



கொழும்பு இராமகிரு'ணமி'ன் மண்டபத்தில் நடைபெற்ற அறநெறி ஆசிரியர்களுக்கான வதிவிட இறுதிநிலைப் பரீட்சைக் கருத்தரங்கு



கொழும்பு இராமகிரு'ணமி'ன் மண்டபத்தில் நடைபெற்ற தர்மாசிரியர்களுக்கான வதிவிடக் கருத்தரங்கு



யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அறநெறி ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு

**3.2 அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான ஆக்கத்திறன் போட்டி மற்றும் பொது அறிவுப் போட்டிப் பரீட்சை இத்திட்டத்திற்காக ரூ 4.40 மில்லியன் செலவளிக்கப்பட்டது.**

**3.2.1 "தேசிய ஆக்கத்திறன் போட்டி"**

அறநெறி மாணவர்களின் கலை ஆற்றல் படைப்புக்களை வெளிக்கொணரும் நோக்குடன் பேச்சு, நடனம், பண்ணிசை ஓதல், வில்லுப்பாட்டு, கட்டுரை ஆக்கம், நாடகம் போன்ற படைப்புக்களில் "ஆக்கத்திறன் போட்டிகள்" தேசிய ரீதியாக அறநெறிப் பாடசாலைகளுக்கிடையே 2015 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டு நடாத்தப்பட்டது. இதில் பிரதேச ரீதியாக போட்டிகள் நடாத்தப்பட்டு அதில் தெரிவானவர்கள் மாவட்ட மட்டத்தில் பங்குபற்றி அதிலும் தேர்வானவர்கள் தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றினர். இத் தேசிய மட்டப் போட்டிகளில் முதல் மூன்று இடத்தினைப் பெற்றவர்களுக்கு கேடயமும்,பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

**3.2.2 "பொது அறிவுப் போட்டிப் பரீட்சை"**

அகில இலங்கை ரீதியில் நடத்தப்படும் இந்து சமய பொது அறிவுப் போட்டிப் பரீட்சை 2006 ஆம் ஆண்டிலிருந்து இத் திணைக்களத்தினால் நாடளாவிய ரீதியில் வருடந்தோறும் தரம் 2 இலிருந்து தரம் 11 வரையான மாணவர்களின் சமய அறிவை மேம்படுத்தல், மதிப்பிடுதல், ஆளுமை விருத்தி என்பவற்றை இலக்காகக் கொண்டு பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் நடைபெற்றது. 183 பரீட்சை நிலையங்களில் 77,000 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியுள்ளனர்.

அதனடிப்படையில் மேற்படி பொது அறிவுப் போட்டிப் பரீட்சைகளிலும், தேசிய ஆக்கத்திறன் போட்டிகளிலும் தேசிய மட்டத்தில் தமது திறன்களை வெளிப்படுத்திய 273 மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவம் 27.02.2016 அன்று கொழும்பு புதிய கதிரேசன் மண்டபத்தில்,சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ னு.ஆ. சுவாமிநாதன் அவர்களின் பங்குபற்றுதலுடனும், அமைச்சின் செயலாளர் திரு.ஏ.சிவஞானசோதி அவர்களின் தலைமையிலும் நடைபெறுவதற்கான ஒழுங்குகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

**3.2.3 "அருள்நெறிவிழா" 2015**

நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு அறநெறி மாணவர்களின் கலை ஆற்றல் படைப்புக்களை வெளிக்கொணரும் நோக்குடன் நடாத்தப்பட்ட ஆக்கத்திறன் போட்டிகளின் பரிசளிப்பு வைபவம் 27.12.2015 அன்று யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் திணைக்களப் பணிப்பாளர் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ்மாவட்டச் செயலாளர் திரு.நா.வேதநாயகம் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிச் சிறப்பித்தார். இவ் வைபவத்தில் பேச்சுப் போட்டியில் 33 மாணவர்களும், கட்டுரைப் போட்டியில் 14 மாணவர்களும், சித்திரப் போட்டியில் 30 மாணவர்களும், தனிநடனத்தில் 26 மாணவர்களும் பண்ணிசையில் 30 மாணவர்களும், வில்லிசையில் 64 மாணவர்களும், குழுநடனத்தில் 38 மாணவர்களும் , நாடகத்தில் 55 மாணவர்களுமாக மொத்தம் 290 மாணவர்களுக்கு வெற்றிப் பரிசில்கள் வழங்கப்பட்டன. இவ் வைபவத்தில் முதற் பரிசு பெற்ற மாணவர்களின் கலைப்படைப்புக்கள் மேடையேற்றப்பட்டதுடன் மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுமாக சுமார் 1000 பேரளவில் கலந்து சிறப்பித்திருந்தனர்.
















யாழ்ப்பாணம் இலங்கை வேந்தன் கலைக்கல்லூரியில் "அருள்நெறிவிழா" 2015 பரிசளிப்பு வைபவத்தின்போது….

### 3.3 இந்து அறநெறிப்பாடசாலை ஆசிரியர்களுக்கான நூலகக்கொடுப்பனவு

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், தமது சமய அறிவை விருத்தி செய்து கொள்வதற்காக நூல்களைக் கொள்வனவு செய்வதற்கென வருடத்திற்கு ஒரு தடவை நூலகக் கொடுப்பனவாக தலாரூ.3400.∵ஸ்ரீவீதம் வழங்கப்படுகின்றது. இதற்கமைவாக 22 மாவட்டங்களிலும் மற்றும் பிற மாவட்டங்களிலும் உள்ளஅறநெறிப் பாடசாலைகளில் 3498 ஆசிரியர்களுக்கு இக் கொடுப்பனவு இவ்வாண்டில் வழங்கப்பட்டுள்ளது.

*அட்டவணை – 03-ஐஐஐ*

**ஆசிரியர்களுக்கான நூலகக்கொடுப்பனவு 2015**

| இல | மாவட்டம் | ஆசிரியர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூபா) |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | 180 | 612,000.00 |
| 2 | அம்பாறை | 414 | 1,407,600.00 |
| 3 | மட்டக்களப்பு | 719 | 2,444,600.00 |
| 4 | கண்டி | 193 | 656,200.00 |
| 5 | நுவரெலியா | 107 | 363,800.00 |
| 6 | மன்னார் | 107 | 363,800.00 |
| 7 | பதுளை | 187 | 635,800.00 |
| 8 | கிளிநொச்சி | 64 | 217,600.00 |
| 9 | கம்பஹா | 16 | 54,400.00 |
| 10 | மாதளை | 95 | 323,000.00 |
| 11 | இரத்தினபுரி | 104 | 353,600.00 |
| 12 | திருகோணமலை | 191 | 649,400.00 |
| 13 | யாழ்ப்பாணம் | 391 | 1,329,400.00 |
| 14 | களுத்துறை | 59 | 200,600.00 |
| 15 | பொலந்நறுவை | 46 | 156,400.00 |
| 16 | காலி | 20 | 68,000.00 |
| 17 | மாத்தறை | 13 | 44,200.00 |
| 18 | குருணாகல் | 4 | 13,600.00 |
| 19 | கேகாலை | 75 | 255,000.00 |
| 20 | புத்தளம் | 68 | 231,200.00 |
| 21 | வவுனியா | 61 | 207,400.00 |
| 22 | முல்லைத்தீவு | 98 | 333,200.00 |
| 23 | வேறு சில | 286 | 572,000.00 |
| | **மொத்தம்** | **3498** | **11,492,800.00** |

### 3.4 இசைக்கருவி கொள்வனவும் விநியோகமும்

இந்த ஆண்டு அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குவதற்கென 97 சுருதிப்பெட்டிகள் மற்றும் 96 தாளங்கள் ரூபா 0.50 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டு அம்பாறை மாவட்டத்தில் 31 அறநெறிப் பாடசாலைகளிலும் முல்லைத்தீவில் 01 பாடசாலைக்குமாக மொத்தம் 32 பாடசாலைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

### 3.5 அறநெறிப்பாடசாலை ஆசிரியர்இமாணவர்களுக்கு சீருடைக் கொள்வனவு

திணைக்களத்தின் மூலம் அறநெறிப் பாடசாலை மாணவ மாணவியர்களுக்கு வருடந்தோறும் இலவசமாக சீருடைத் துணிகள் வழங்கப்படுகின்றன.இதற்கமைவாக 10,213 ஆண் பிள்ளைகளுக்கான சீருடைகளும் 16,310 பெண் பிள்ளைகளுக்கான சீருடைகளும் மொத்தமாக 26,523 மாணவர்களுக்கான சீருடைகள் ரூபா 14.98 மில்லியன் செலவில் கொள்வனவு செய்யப்பட்டது.

### 3.6 பண்ணிசை வகுப்புகள்

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் பண்ணிசை ஆற்றலை ஊக்குவிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டிலும் மாவட்ட மட்டங்களில் பண்ணிசை வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டில் 521 பண்ணிசை வகுப்புக்கள் களுத்துறை, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பதுளை, அம்பாறை புத்தளம்,ஆகிய மாவட்டங்களில் நடைபெற்றுள்ளன.

*அட்டவணை – 03-ஐ*

| இல | மாவட்டம் | வகுப்புகளின் எண்ணிக்கை | தொகை (ரூபா) | பங்குபற்றிய மாணவர்கள் | மணித்தியாலங்கள் |
|---|---|---|---|---|---|
| 1 | களுத்துறை | **77** | **28,000** | 30 | 146 |
| 2 | யாழ்ப்பாணம் | **208** | 52,000 | 68 | 256 |
| 3 | மட்டக்களப்பு | **134** | 40,750 | 60 | 326 |
| 4 | அம்பாறை | **66** | 9,000 | 30 | 72 |
| 6 | பதுளை | **25** | 28,000 | 30 | 60 |
| 7 | புத்தளம் | **11** | 7,000 | 25 | 60 |
| | **மொத்த தொகை** | **521** | **164,750** | **188** | **920** |

### 3.7 அறநெறிப்பாடசாலை அபிவிருத்திக்கான மூலதனக் கொடுப்பனவு

அறநெறிப்பாடசாலைகளின் தளபாடத் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்குடன்ரூபா 1.5 மில்லியன் செலவில் 10 மாவட்டங்களிலுள்ள 50 அறநெறிப்பாடசாலைகளுக்கு நிதியுதவி வழங்கப்பட்டது.

*அட்டவணை – 03-ஏ*

| இல | மாவட்டம் | அறநெறிப் பாடசாலைகளின் எண்ணிக்கை | தொகை ரூபா | பயனாளிகள் |
|---|---|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | 12 | 360,000 | 520 |
| 2 | மட்டக்களப்பு | 13 | 390,000 | 600 |
| 3 | திருகோணமலை | 9 | 270,000 | 520 |
| 4 | கண்டி | 1 | 30,000 | 50 |
| 5 | களுத்துறை | 1 | 30,000 | 30 |
| 6 | பதுளை | 5 | 150,000 | 240 |
| 7 | வவுனியா | 1 | 30,000 | 45 |
| 8 | முல்லைத்தீவு | 3 | 90,000 | 250 |
| 9 | புத்தளம் | 4 | 120,000 | 120 |
| 10 | கிளிநொச்சி | 1 | 30,000 | 35 |
| | **மொத்தம்** | **50** | **1,500,000** | **2410** |

**3.8 அறநெறிப் பாடசாலை மாணவர்களின் துணைநூற் பயன்பாட்டிற்கெனப் பின்வரும் இந்து சமய நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டன**

**திணைக்களத்தின் அனுசரணையோடு ரூபா 0.34 மில்லியன் செலவில் சமயம், அறிவுசார்ந்த நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு இலங்கையிலுள்ள அனைத்து அறநெறி பாடசாலைகளுக்கும் வழங்கப்பட்டது.**

- அறநெறி அமுதம் - 3,000 பிரதிகள்
- இந்து சமயத்தின் சீர்திருத்த இயக்கங்கள் - 500 பிரதிகள்
- இறுதிநிலை பரீட்சை வினாவிடை - 200 பிரதிகள்
- பக்தி யோகம் - 100 பிரதிகள்
- கர்ம யோகம் - 70 பிரதிகள்
- பகவத் ஞான துளிகள் - 40 பிரதிகள்
- கடல் கன்னி - 200 பிரதிகள்
- பேசும் பேனா - 200 பிரதிகள்
- Garden of life (தரம் 3,5,7) - 03 பிரதிகள்
- ஔவையார் அறிவுச் செல்வம் - 23 பிரதிகள்
- பதிவேடு - 1,137 பிரதிகள்
- பன்னிரு திருமுறை தோத்திரப்பாடல் - 05 பிரதிகள்
- சமய குரவர் படங்கள் - 04 பிரதிகள்
- தர்மாசிரியர் வினாவிடை - 565 பிரதிகள்
- ஆன்மீக மங்களம் - 37 பிரதிகள்
- வேறு சமய நூல்கள் - 964 பிரதிகள்

**3.9 அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான நூல்கள், பதிவேடுகள் அச்சிடல்.'.வழங்கல்**

அறநெறிப் பாடசாலை, ஆசிரியர்கள் மாணவர்களுக்கு உதவும் வகையில்ரூபா 0.03 மில்லியன் செலவில் கீழ்வரும்நூல்கள்அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ளன.

**அச்சிடப்பட்ட நூல்கள்**

- சைவபோதினி - 578 பிரதிகள்
- பன்னிரு திருமுறை தோத்திரத் திரட்டு - 896 பிரதிகள்
- வரவுப் பதிவேடு - 2788 பிரதிகள்
- ஆசிரியர் கையேடு - 1752 பிரதிகள்
- இந்து மக்களுக்கு ஒரு கையேடு - 293 பிரதிகள்
- பாடத்திட்டம் - 1373 பிரதிகள்
- ஔவையார் அறிவுச்செல்வம் - 2061 பிரதிகள்
- அறநெறி அமுதம் - 1589 பிரதிகள்
- சைவ கோவில்களும் மனித உடலும் - 157 பிரதிகள்
- நித்திய வழிபாட்டுத் தோத்திரத் திரட்டு - 83 பிரதிகள்
- இறுதிநிலை பரீட்சை வினாவிடை - 192 பிரதிகள்
- சைவசமயம் 277 பிரதிகள்
- வேதங்களும் ஆகமங்களும் - 262 பிரதிகள்
- பன்னிரு திருமுறை - 205 பிரதிகள்
- சமய ஞானிகளும் பெரியார்களும் - 231 பிரதிகள்
- இந்து நாகரீகம் - 38 பிரதிகள்
- புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக பாடத்திட்ட நூல்கள் அச்சிடப்பட்டன.
    - அறநெறிக்கான வழிகாட்டி நூல்கள் - 2000 பிரதிகள்
    - கை நூல்கள் - 5000 பிரதிகள்

**3.10 இந்து இளைஞர்களுக்கான ஆன்மீக தலைமைத்துவப் பயிற்சி**

இந்து இளைஞர்களின் ஆன்மீக மற்றும் ஆளுமைப் பண்புகளையும் தலைமைத்துவத்தையும் வளர்க்கும் நோக்குடன் வருடந்தோறும் நடத்தப்படும் இப்பயிற்சி இவ்வாண்டு பெப்ரவரி மாதம் 14,15ஆம் திகதிகளில் காலி, களுத்தறை மாவட்ட இந்து இளைஞர்களுக்கு கொழும்பு இராமகிரு'ணமிசன் மண்டபத்தில் 75 இந்து இளைஞர்களுக்கு வதிவிடக் கருத்தரங்கு ரூபா 0.175 மில்லியன் செலவில் நடத்தப்பட்டுள்ளன.

## 4.0 இந்துசமய மேம்பாடு

இந்துசமயப் பண்பாடு மற்றும் சமய விழாக்களை ஊக்குவிக்கும் நோக்குடன், திணைக்களம் பல்வேறு மாவட்டங்களிலும் விழாக்களை ஒழுங்கு செய்வதோடு, அனுசரணையையும் வழங்குகின்றது.

### 4.1 இந்துசமய விரிவுரைகள்

ஆலயங்கள் மற்றும் இந்துசமய நிறுவனங்களில் சமயச் சொற்பொழிவாளர்கள் மூலம் இந்து சமயச் சொற்பொழிவுகள் மற்றும் விரிவுரைகள் நடத்தப்படுகின்றன. இதுவரை யாழ்ப்பாணம், புத்தளம், மட்டக்களப்பு, இரத்தினபுரி, மாத்தளை, கண்டி, அம்பாறை, பதுளை, கொழும்பு, நுவரெலியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி, களுத்துறை, காலி ஆகிய14 மாவட்டங்களில் 136 சமய விரிவுரைகள்ரூபா 0.114 மில்லியன் செலவில் நடாத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 8000 ற்கும் மேற்பட்ட இந்துப் பொது மக்கள் பயன்பெற்றுள்ளனர்.

படங்கள் - III

இந்து சமயச் சொற்பொழிவு நிகழ்வுகள்



20.02.2015 இல் மாந்தை மேற்கு இலுப்பக்கடவை முனியப்பர் ஆலயத்தில் நடைபெற்ற சமய சொற்பொழிவு



22.02.2015 இல் மன்னார் உப்புக்குளம் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற சமய சொற்பொழிவு



15.03..2015 இல் கண்டி ஆதித்தியா அறநெறிப் பாடசாலையில் நடைபெற்ற சமய சொற்பொழிவு



15.03..2015 இல் மன்னார் ஆண்டான்குளம் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெற்ற சமய சொற்பொழிவு

### 4.2 குருபூஜைகள்

இந்து சமய நாயன்மாரின் குருபூஜைத் தினங்களை அனு‘டிக்கும் முகமாக ஆலயங்களில் விசேட நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன. இவ்வாண்டு யாழ்ப்பாணம், காலி, இரத்தினபுரி, கொழும்பு, பதுளை, நுவரெலியா, முல்லைத்தீவு, கண்டி, திருகோணமலை, மன்னார், அம்பாறை, மட்டக்களப்பு, மாத்தளை, கம்பஹா, புத்தளம், பொலநறுவை ஆகிய 16 மாவட்டங்களில் 122 நாயன்மார் குருபூஜைகள் ரூபா 0.391 மில்லியன் செலவில் இடம்பெற்றுள்ளன. பிரதேச செயலகங்களில் இணைக்கப்பட்டுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உதவியுடனும், சமய நிறுவனங்களின் அனுசரணையுடனும் இவை ஏற்பாடு செய்யப்பட்டன.இதன் மூலம் 7500 ற்கும் மேற்பட்ட இந்துப் பொது மக்கள் பயன்பெற்றுள்ளனர்.

படங்கள் - IV

இந்து சமய நாயன்மார்களின் குருபூசைகள்



கண்டியில நடைபெற்ற திருவள்ளுவர் குருபூசை



தெல்லிப்பளை நீலியம்மன பிள்ளையார் ஆலயத்தல நடைபெற்ற கண்ணப்ப நாயனார் குருபூசை



முல்லைத்தீவில நடைபெற்ற காரைக்கால அம்மையார் குருபூசை



பொத்துவிலில நடைபெற்ற கண்ணப்ப நாயனார் குருபூசை

## 4.3 இந்து சமய விழாக்கள்

இந்து சமய விழாக்களை ஊக்குவிக்கும் நோக்குடன் 2015 ஆம் ஆண்டில்ரூபா 1.063 மில்லியன் செலவில் எமது திணைக்களத்தின் அனுசரணையுடன் பல மாவட்டங்களில் சமய விழாக்கள் முன்னெடுக்கப்பட்டது.

### 4.3.1 தைப்பொங்கல் விழா

மாவட்ட ரீதியில் திணைக்களத்தின் அனுசரணையுடன் தைப்பொங்கல் விழா கோயில்களிலும்இ அறநெறிப்பாடசாலைகளிலும்இ பிரதேச செயலகங்களிலும்இ நடைபெற்றது.

அட்டவணை – 4 - I

| இல | விழா நடைபெற்ற பிரதேச செயலகம் | நடைபெற்ற இடங்கள் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | இந்துசமய கலாசார மன்றம், கொழும்பு | 100 |
| 2 | முல்லைத்தீவு | இந்துசமய கலாசார மன்றம், கொழும்பு | 100 |
| 3 | கிளிநொச்சி | அருள்மிகு கந்தசாமி தேவஸ்தானம், கிளிநொச்சி<br>ஸ்ரீ மகாதேவ ஆச்சிரமம், கிளிநொச்சி | 100 |
| 4 | தெல்லிப்பளை | மல்லாகம் பழம்பதி அறநெறி | 100 |
| 5 | புத்தளம் | தில்லையடி முருகன் ஆலயம் | 350 |
| 6 | மாந்தை-மேற்கு | இந்து இளைஞர் மன்றம், மூன்றாம்பிட்டி, மன்னார் | 50 |
| 7 | பசறை | ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம், பசறை | 145 |
| 8 | வேலணை | பிரதேச செயலகம், வேலணை | 85 |
| 9 | செங்கலடி | அம்மன் அறநெறிப்பாடசாலை வந்தாறுமூலை | 200 |
| 10 | மன்னார் | ஸ்ரீ முத்துமாரியம்மன் தேவஸ்தானம்,மன்னார் | 100 |

**படங்கள் - V**



ஆரயம்பதியில் அறநெறி மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட தைப்பொங்கல் நிகழ்வு



புதுக்குடியிருப்பில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வு



கிளிநொச்சி கந்தசுவாமி கோயிலில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வு



வவுனியா முத்துமாரியம்மன் ஆலயத்தில் நடைபெற்ற தைப்பொங்கல் நிகழ்வு

### 4.3.2 மகா சிவராத்திரி விழா

திணைக்களத்தின் அனுசரணையுடன் மஹா சிவராத்திரி விரதத்தை முன்னிட்டு விசேட பூஜைகள் மற்றும் ஆன்மீக கலைநிகழ்ச்சிகள்8 மாவட்டங்களிலுள்ள 26 பிரதேச செயலகங்களில் நடைபெற்றன.

*அட்டவணை – 4 - ஐஐ*

| இல | விழா நடைபெற்ற பிரதேச செயலகம் | நடைபெற்ற இடங்கள் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கண்டி | நிந்தவலை ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலய, விவேகானந்தர் அறநெறிப் பாடசாலை | 110 |
| 2 | செங்கலடி | ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம் செங்கலடி, | 150 |
| 3 | திருகோணமலை | ஸ்ரீ செண்பகவல்லி அம்மன் ஆலயம், கிளிவெட்டி | 105 |
| 4 | வவுணதீவு | கொத்தியாபுலை ஸ்ரீ முதலைமடு பிள்ளையார் தேவஸ்தானம் | 300 |
| 5 | நல்லூர் | திருநெல்வேலி காளியம்மன் ஆலயம் | 225 |
| 6 | உடுவில் | குப்பிளான் வீரமனை கன்னிமார் அறநெறிப் பாடசாலை | 440 |
| 7 | வெல்லாவெளி | முனைத்தீவு ஸ்ரீ விநாயகர் அறநெறிப்பாடசாலை | 150 |
| 8 | லுணுகல | செல்வ விநாயகர் ஆலயம் | 100 |
| 9 | பதுளை | ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை | 320 |
| 10 | முல்லைத்தீவு | ஆதி வைரவர் ஆலயம் | 350 |
| 11 | கராபொல | ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், கராபொல, பொலநறுவை | 150 |
| 12 | கரவெட்டி | கருணையம்பதி அருள்மிகு ஸ்ரீ வாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரர் சுவாமி ஆலயம் | 145 |
| 13 | பொத்துவில் | ஊறணி விநாயகர் ஆலயம் | 300 |
| 14 | கிளிநொச்சி | கமலாம்பிகை சமேத தாயுமானவர் தேவஸ்தானம், கிளிநொச்சி | 225 |
| 15 | கொழும்பு | இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், இந்து பரிபாலன சங்கம் | 200 |
| 16 | அம்பாறை நாவிதன்வெளி | பாமடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம் | 200 |
| 17 | மட்டக்களப்பு வாகரை | பாற்சேனை விநாயகர் அறநெறிப்பாடசலை | 120 |
| 18 | வாழைச்சேனை | பேத்தாளை வீரையடி விநாயகர் அறநெறிப்பாடசாலை | 320 |
| 19 | கிரான் | ஸ்ரீ மகா விஷ்ணு ஆலயம், கிரான் | 300 |
| 20 | கிளிநொச்சி | உருத்திரபுரம், உருத்திரபுரீஸ்வரர் ஆலயம் | 230 |
| 21 | பட்டிப்பளை | நாகலிங்கேஸ்வரர் ஆலயம், முனைக்காடு | 125 |
| 22 | தென்மராட்சி | ஆதி விநாயகர் ஆலயம், சாவகச்சேரி | 350 |
| 23 | கிளிவெட்டி | ஸ்ரீ செண்பக வல்லி அம்மன் ஆலயம், கிளிவெட்டி | 250 |
| 24 | காலி | நாக்கியாதெனிய ஆலயம் | 150 |
| 25 | காரைதீவு | ஸ்ரீ நந்தவன சித்திவிநாயகர் ஆலயம் | 125 |
| 26 | புத்தளம் | கொட்டாருமுல்லை,ஸ்ரீ கணேஸ்வரர் ஆலயம் | 100 |

**படங்கள் - VI**

சிவராத்தரி நிகழ்வுகள






பதுளையில் நடைபெற்ற மகா சிவராத்தரி விழாவில் அறநெறி மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்வு



கண்டி நித்தவலை ஸ்ரீ முத்துமாரியம்மன ஆலயத்தில நடைபெற்ற மகா சிவராத்தரி விழாவில் அறநெறி மாணவர்களால் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்வு



யாழ் திருநெல்வேலி ஸ்ரீ காளி அம்மன ஆலயத்தில நடைபெற்ற மகா சிவராத்தரி விழாவில் நிகழ்த்தப்பட்ட கலை நிகழ்வு

அட்டவணை – 4 - III

| இல | புதுவருடப்பிறப்பு நடைபெற்ற பிரதேச செயலகம் | நடைபெற்ற இடங்கள் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கீரிமலை | நகுலேஸ்வரர் ஆலயம், கீரிமலை | 300 |
| 2 | வேலணை | வங்களாவடி முருகன் ஆலயம், வேலணை | 200 |
| 3 | அகலவத்த | பிரதேச செயலகம், அகலவத்தை | 100 |
| 4 | பட்டிப்பளை | கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் ஆலயம் | 150 |
| 5 | கொழும்பு | இந்து சமய கலை கலாசார மன்றம் | 100 |
| 6 | கண்டி | இந்து இளைஞர் மன்ற அறநெறி பாடசாலை | 160 |
| 7 | கோவில்குளம் | அருள்மிகு அகிலாண்டேஸ்வரர் கோவில் | 75 |
| 8 | பதுளை | பிரதேச செயலகம், பதுளை | 200 |
| 9 | தெல்லிப்பளை | பிரதேச செயலகம், தெல்லிப்பளை | 150 |
| 10 | காலி | நாக்கியாதெனிய ஆலயம் | 120 |
| 11 | சேகுவன்தீவு | இந்து இளைஞர் மன்றம், சேகுவன்தீவு | 130 |

**படங்கள் - VII**





இவ்வாண்டு திணைக்களத்தின் அநுசரணையுடன் கொழும்பு 13, ஸ்ரீ பொன்னம்பலம் வாணேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற புதுவருடப்பிறப்பு விழா

### 4.3.4 நவராத்திரி விழா

திணைக்களத்தின் அனுசரணையுடன் செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் ஒக்டோபர் மாதம் 22 ம் திகதி வரை 10 மாவட்டங்களில் 24 நவராத்திரி விழா வைபவம் இடம்பெற்றது. திணைக்களத்திலும் பாராளுமன்றத்திலும் 20.10.2015 அன்று நவராத்திரி விழா கொண்டாடப்பட்டது.

*அட்டவணை – 4* - IV

| இல | நவராத்திரி நடைப்பெற்ற பிரதேச செயலகம் | நடைப்பெற்ற இடங்கள் | பங்குபற்றியோர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | கண்டி | கட்டுக்கலை, செல்வவிநாயகர் ஆலயம் | 100 |
| 2 | செங்கலடி | ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம், வேப்பவட்டுவான் | 100 |
| 3 | திருகோணமலை | ஸ்ரீ பாலமுருகன் ஆலயம், பாலையூற்று, திருகோணமலை | 100 |
| 4 | வவுணதீவு | வவுணதீவு, முருகன் ஆலயம் | 50 |
| 5 | நல்லூர் | ஸ்ரீ காளியம்மன் ஆலயம், திருநெல்வேலி | 100 |
| 6 | உடுவில் | சாளம்பையன் அறநெறி மல்லாகம் | 150 |
| 8 | லுணுகல | ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம் | 100 |
| 9 | பதுளை | ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப்பாடசாலை, பதுளை | 100 |
| 10 | முல்லைத்தீவு | ஆதிவைரவர் ஆலயம், கள்ளப்பாடு, கரைதுறைப்பற்று | 80 |
| 11 | கராபொல | மன்னம்பிட்டி, தமிழ் மகா வித்தியாலயம் | 100 |
| 12 | கரவெட்டி | ஸ்ரீ வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வரர் ஆலயம் | 100 |
| 13 | பொத்துவில் | விநாயகர் அறநெறி பொத்துவில் | 55 |
| 14 | கிளிநொச்சி | உருத்திரபுரீஸ்வரர் ஆலயம், கிளிநொச்சி | 100 |
| 15 | கொழும்பு | வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம் | 02 |
| 16 | அம்பாறை நாவிதன்வெளி | குபண்டிஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், | 100 |
| 17 | மட்டக்களப்பு வாகரை | மாங்கேணி சித்தி விநாயகர் ஆலயம், வாகரை | 180 |
| 18 | வாழைச்சேனை | ஆறுமுக நாவலர் அறநெறிப் பாடசாலை மருதநகர் கல்மடு | 60 |
| 19 | கிரான் | ஸ்ரீ மகாவிஷ்ணு ஆலயம் கிரான் | 72 |
| 20 | கிளிநொச்சி | ஸ்ரீ கமலாம்பிகா சமேத தாயுமான சுவாமி தேவஸ்தானம் | 60 |
| 21 | பட்டிப்பளை | நாகலிங்கேஸ்வரர் ஆலயம், முனைக்காடு | 120 |
| 22 | தென்மராட்சி | பிரதேச செயலகம், தென்மராட்சி, சாவகச்சேரி | 105 |
| 23 | கிளிவெட்டி | ஸ்ரீ செண்பகவல்லி அம்மன் ஆலயம் | 50 |
| 24 | காரைதீவு | நந்தவன சித்தி விநாயகர் ஆலயம், காரைதீவு | 130 |

படங்கள் - **VIII**





பாராளுமன்றத்தில் கொண்டாடப்பட்ட நவராத்திரி விழா

### 4.4 புண்ணிய கிராம நிகழ்ச்சித் திட்டம்

தெரிவு செய்யப்பட்ட, மிகவும் பின்தங்கிய பிரதேசங்களில் பொது மக்களை ஒன்று கூட்டி இந்துமத ஒழுக்கப் பண்புகளைப் போதிக்கும் வகையிலான இத்திட்டத்தின் கீழ் 14 மாவட்டங்களில் 23 புண்ணிய கிராம நிகழ்வுகள் ரூபா 0.332 மில்லியன் செலவில் நடாத்தப்பட்டுள்ளன. 2500 ற்கும் மேற்பட்ட பொது மக்கள், மற்றும் பள்ளி மாணவர்கள் இவற்றில் பங்குகொண்டு பயன் பெற்றனர்.

அட்டவணை – 4 - V

| இல | புண்ணிய கிராமங்கள் உருவாகிய மாவட்டங்கள் | புண்ணிய கிராமங்கள் உருவாகிய இடங்களின் எண்ணிக்கை | நடத்தப்பட்ட இடங்கள் |
|---|---|---|---|
| 1 | பதுளை | 2 | பதுளை, வெலிமட |
| 2 | யாழ்ப்பாணம் | 5 | நல்லூர், வேலணை, பொலிகண்டி, கரவெட்டி, வல்வெட்டித்துறை |
| 3 | கண்டி | 1 | கலகா |
| 4 | மட்டக்களப்பு | 3 | பட்டிப்பளை, கிரான், அம்பிலாந்துறை, |
| 5 | கம்பஹா | 1 | நீர்கொழும்பு |
| 6 | பொலநறுவை | 1 | மன்னம்பிட்டி |
| 7 | வவுனியா | 2 | வவுனியா, சின்னக்குளம் |
| 8 | கிளிநொச்சி | 2 | பூநகரி, கிராஞ்சி |
| 9 | மன்னார் | 1 | மடுக்கரை |
| 10 | காலி | 1 | நராவலை |
| 11 | மாத்தறை | 1 | தெனியாய |
| 12 | அம்பாறை | 1 | நாவிதன்வெளி |
| 13 | களுத்துறை | 1 | பதுரெலிய |
| 14 | கேகாலை | 1 | உத்தகொட |

**படங்கள் - IX**





கிளிநொச்சி, பூநகரியில் நடைபெற்ற புண்ணியகிராம நிகழ்வு

### 4.5 நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் இடம்பெறும் வகுப்புக்கள்

திணைக்கள நிர்வாகத்திலுள்ள யாழ்ப்பாணம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் ரூபா 0.603 மில்லியன் செலவில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் உடல், உள, ஆரோக்கியத்தினையும் கலாசார வளர்ச்சியினையும் நோக்காகக் கொண்டு யோகாசனம், பண்ணிசை, சங்கீதம, வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய வகுப்புக்கள் நடைபெற்றன. மேலும் நாயன்மார்களின் குருபூசைகள், நவராத்திரிவிழா மற்றும் திருவாசகவிழா ஆகியனவும் நடத்தப்பட்டுள்ளன.

அட்டவணை – 4 - VI

| நாவலர் மணிமண்டபம் | | | |
|---|---|---|---|
| **மாவட்டம்** | **வகுப்புகள்** | **நடைபெற்ற வகுப்புக்களின் எண்ணிக்கை** | **பங்குபற்றிய மாணவர்களின் எண்ணிக்கை** |
| யாழ்ப்பாணம் | வயலின் | 79 | 157 |
| | மிருதங்கம் | 78 | 173 |
| | பண்ணிசை | 164 | 141 |
| | யோகாசனம் | 182 | 674 |
| **மொத்த தொகை** | | **503** | 1145 |

படங்கள் - X

யாழ் மணிமண்டபத்தில அறநெறி மாணவர்களின உடல உள மற்றும் கலாசார மேம்பாட்டிற்காக நடத்தப்படும வகுப்புக்கள்









29

நிகழ்வுக்காக சர்வமதத் தலைவர்கள் மற்றும் குருமார்களும் சந்தித்தனர். இதற்காக நாட்டின் பல பாகங்களையும் சேர்ந்த இந்துக்குருமார்கள் 150 பேர் கொழும்பிற்கு திணைக்களத்தின் பொறுப்பில் அழைத்துவரப்பட்டு இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## 5.0 இந்து சமய கலாசார ஆராய்ச்சி தமிழ்க்கலை

### 5.1 இந்து சமய ஆராய்ச்சிக் கருத்தரங்கு- நிதி முன்னேற்றம் ருபா1.56 மில்லியன்

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடந்தோறும் இந்துசமயம், தத்துவம், வரலாறு மற்றும் திருமுறைசார்ந்த கருப்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு மாநாடுகளை நடத்தி வருகின்றது. அந்தவகையில் திருமுறைகளை அடிப்படையாகக் கொண்டு மாநாடு கடந்த இரண்டு வருடங்களாக நடைபெற்றது. அதன் தொடர்ச்சியாக 9ம், 10ம் திருமுறைகளான திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருமந்திரம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு திருமுறைகளும் சைவத்திருநெறியும் என்னும் தலைப்பில் திருமுறை மாநாடு ஏப்ரல் 3, 4, 5 ஆம் திகதிகளில் நடைபெற்றது. இத்திருமுறை மாநாடு காலையில் ஆய்வரங்காகவும் மாலையில் பொதுமக்களுக்கான அரங்காகவும் நடாத்தப்பட்டது. ஆய்வரங்கம் கொழும்பு இராமகிரு'ணமி'ன் விரிவுரைமண்டபத்திலும், பொதுஅரங்கு கொழும்பு இராமகிரு'ணமி'ன் பெரியமண்டபத்திலும், கொழும்பு தமிழ்ச்சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்திலும் மூன்றுநாட்கள் நடத்தப்பட்டன.

திணைக்களப் பணிப்பாளர் திருஅ.உமாமகேஸ்வரன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற ஆய்வரங்கு நிகழ்வுகளின் பிரதம அதிதிகளாக பொதுஅரங்கின் முதல் நாள் வைபவத்தின் பிரதம அதிதியாக மீள்குடியேற்றம் புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் திருமதி.ரஞ்சினி நடராஜபிள்ளை அவர்களும் இரண்டாம் நாள் நிகழ்வில ˙மீள்குடியேற்றம் புனர்நிர்மாணம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் கௌரவ அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் அவர்களும் வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி விக்னேஸ்வரன் அவர்களும் மூன்றாம் நாள் நிகழ்விற்கு மேல்மாகாண ஆளுநர் கௌரவ கே.சி.லோகேஸ்வரன் அவர்களும் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்ததுடன் சிறப்பான உரைகளையும் ஆற்றினர்.

திணைக்களத்தின் அழைப்பின் பேரில் ஆன்மீக அருளுரை வழங்குவதற்காக திருப்பனந்தாள் காசித்திருமடத்தின் இளையசந்நிதானம் தவத்திரு சுந்தரமூர்த்தி சுவாமிகள் வருகைதந்து மூன்று தினங்களும் அருளுரை வழங்கி மாநாட்டைச் சிறப்பித்திருந்தார். மேலும் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சார்ந்த பேராசிரியர் அரங்க இராமலிங்கம் அவர்களும், பேராசிரியர் ரி.சிவகுமார் அவர்களும், திருமுறை சார்ந்த சிறப்புச் சொற்பொழிவுகளை, கருத்தாழம்

மிக்கதாகவும் சிந்தனையைத் தூண்டும் விதமாகவும் அதே நேரத்தில் நகைச்சுவை உணர்வுடனும் மக்கள் மனதில் பதியும் விதமாகவும் உரையாற்றி நிகழ்வைச் சிறப்பித்தனர். இதன்போது திருமுறைக் கலாநிதி பண்ணிசைமாமணி அருட்கலைஞர் திருத்தணி சுவாமிநாதன் அவர்களது பண்ணிசைக் கச்சேரி நடைபெற்றது. அவருக்கு அணிசேர் கலைஞர்களாக இந்தியாவிலிருந்து வருகைதத்த பிரம்மஸ்ரீ சர்வதேசக்குருக்கள் வெங்கடேசனும் (வயலின்), திருவண்ணாமலை திரு.ரி.எம்.சிவகுமாரும் (மிருதங்கம்) பங்கேற்றனர்.

ஏப்ரல் 4, 5 ஆம் திகதிகளில் ஆய்வரங்க அமர்வுகள் கொழும்பு இராமகிரு'ண மி'ன் மண்டபத்தில் காலை 8.30 மணிமுதல் மாலை 4.00 மணிவரை நடைபெற்றன. 9ஆம் 10 ஆம் திருமுறைகளில் அடங்கியுள்ள திருமந்திரம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு ஆகியவற்றின் உட்பொருளை விளங்கும் 32 ஆய்வுக் கட்டுரைகள் இலங்கை, தமிழக அறிஞர்களால் சமர்ப்பிக்கப்பட்டன. இம் மூன்று தினங்களிலும் பல்கலைக்கழக, பாடசாலை மாணவர்கள் மற்றும் இந்துசமய ஆர்வலர்கள் அடங்கலாக ஒவ்வொருநாளும் தலா 250க்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

**படங்கள் - XI**



ஆராய்ச்சிக் கருத்தரங்கில் வெளியீடு செய்யப்பட்ட கடந்த வருட ஆய்வரங்கக் கட்டுரைகளின் தொகுப்பு நூல்




ஆராய்ச்சிக் கருத்தரங்கில் வெளியீடு செய்யப்பட்ட ஆய்வரங்க சிறப்பு மலர்










### 5.1.1 மட்டக்களப்பில் திருமுறைமாநாடு

மட்டக்களப்பு நாவற்குடா இந்துகலாசார மண்டபத்தில் 07.04.2015 செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையுடன் இணைந்து ஒருநாள் மாநாட்டினை நடாத்தியது. இந்நிகழ்விற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினரும் மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் தலைவருமான கௌரவ சி.யோகேஸ்வரன் தலைமை தாங்கினார். தவத்திரு சுந்தரமூர்த்திசுவாமி அவர்களின் அறிவுரையும், பேராசிரியர் திரு.அரங்க இராமலிங்கம், பேராசிரியர் திரு.ரி.சிவகுமார் ஆகியோரின சொற்பொழிவுகளும், திருமுறைக் கலாநிதி கலைமாமணி திருத்தணி சுவாமிநாதன் அவர்களின் பண்ணிசையும் நடைபெற்றது. இந்நிகழ்வில் இந்துக்குருமார்கள் ஆலய அறங்காவலர்கள், பாடசாலை மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### 5.1.2 ஆய்வரங்கு கட்டுரைத் தொகுப்பு, சிறப்புமலர், இலங்கைதமிழ் வழக்குச்சொற்கள், பஞ்சாங்கம், பண்பாடு ஆகிய நூல்களின் வெளியீடு - நிதி முன்னேற்றம் ரூபா 1.48 மில்லியன்

2014ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட ஆய்வரங்கின் போது சமரப்பிக்கப்பட்ட கட்டுரைத் தொகுப்பான திருவாதவூரரும் சைவத்திருநெறியும் (750 பிரதிகள்) எனும் நூலும் இலங்கைத் தமிழர்களின் பயன்பாட்டிலுள்ள இலங்கை தமிழ் வழக்குச் சொற்கள் (500 பிரதிகள்) என்ற நூலும், இசைப்பாவும் மந்திரமும் (1000 பிரதிகள்) எனும் சிறப்புமலரும் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டன. சிறப்புமலர் ஆய்வரங்கில் பங்கு பற்றியவர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.
2015ஆம் ஆண்டிற்கான மக்களின் பயன்பாட்டிற்காக 10,000 பஞ்சாங்கம் அச்சிடப்பட்டு நாடு பூராகவும் உள்ள ஆலயங்கள், இந்து மன்றங்கள், இந்து பொதுமக்கள் ஆகியோருக்கு இலவசமாக விநியோகிக்கப்பட்டது.

பண்பாடு(1000 பிரதிகள்) அச்சிடப்பட்டு பல்கலைக்கழகங்கள் பொதுமக்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. இதற்கு ஒதுக்கப்பட்ட நிதி 1.48 மில்லியன்

படங்கள் - **XII**




பஞ்சாங்கம் 2015-2016




“பண்பாடு” இதழ் I




இலங்கை, இந்திய தமிழ்ச் சொல் வழக்கு நூல்

### 5.2 சமஸ்கிருத மொழி வகுப்புக்கள் - நிதி ஒதுக்கீடு ரூபா 0.176 மில்லியன்

மூன்று மாத கால சமஸ்கிருத மொழி வகுப்புக்கள் யாழ்ப்பாணத்திலும் மட்டக்களப்பிலும் நடத்தப்பட்டுள்ளன .யாழ்ப்பாணமாவட்டத்தில் 20 மாணவர்களும் மட்டக்களப்பில் 12 மாணவர்களும் கலந்துகொண்டனர். ஒதுக்கப்பட்டநிதி 0.176 மில்லியன் பூரணமாக செலவளிக்கப்பட்டது

### 5.3 சாசனவியல் பயிலரங்கு-நிதி முன்னேற்றம்ரூபா 0.35 மில்லியன்

ஜனவரி 17 ஆம் திகதிதொடக்கம் 26ஆம் திகதி வரை மட்டக்களப்பு நாவற்குடா இந்துகலாசாரமண்டபத்தில் நடத்தப்பட்டது. இப்பயிலரங்கு ஆரம்பநிலை சாசனவியல் பயிலரங்காக நடத்தப்பட்டது. இப்பயிலரங்கில் பல்கலைக்கழகங்களைச் சார்ந்த 50 மாணவர்கள் கலந்துகொண்டுபயன்பெற்றனர். ஒதுக்கப்பட்டநிதி 0.35 மில்லியன் ஆகும். இந் நிதி பூரணமாகப் பயன்படுத்தப்பட்டது.

**5.4 ஆராய்ச்சிக் கூட்டங்களும் கலந்துரையாடல்களும் -நிதி முன்னேற்றம்ரூபா 0.05 மில்லியன்**

ஆலோசனைசபைக்கூட்டம்ஆராய்ச்சிக் கருத்தரங்கு ஒழுங்குபடுத்தல் நூல்கள் வெளியீடுஇந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் சைவசமயப் பாடநூலில் உள்ளகுறைபாடு மறுசீரமைப்பு சம்பந்தமாக 05 கலந்துரையாடல் கூட்டங்கள் நடைபெற்றுள்ளது. இதற்காக 0.05 மில்லியன் நிதி செலவழிக்கப்பட்டது.

**5.5 இலங்கை எழுத்தாளர்களிடமிருந்து நூல்களைக் கொள்வனவு செய்தல் - நிதி முன்னேற்றம் ரூபா 0.26 மில்லியன்**

இலங்கை தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவிக்கும் முகமாக 41 எழுத்தாளர்களிடமிருந்து 1393 நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டு பாடசாலை நூலகங்கள் பொதுசன நூலகங்களுக்கு விநியோகம் செய்யப்பட்டன. ஒதுக்கப்பட்டநிதி ரூபா 0.26 உம் செலவழிக்கப்பட்டுள்ளது.

## 6.0 இந்துக் தமிழ்க்கலை கலாசார மேம்பாடு

**6.2 நாட்டுப்புறக் கலைமேம்பாடு**

தமிழ்க் கலைகளை ஊக்குவிக்கும் செயற்திட்டத்தின் கீழ் நாட்டுப்புறக் கலைகள் தொடர்பாக் ஒக்டோபர் மாதம் திணைக்களக் கேட்போர் கூடத்தில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது. இக்கருத்தரங்கில் 30இற்கு மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

**6.3 கலாபூ'ணம் விருது 2015– நிதி முன்னேற்றம் 0.74**

கலை கலாசார ரீதியாக அளப்பரிய சேவைகள் ஆற்றிய கலைஞர்களுக்கு வருடந்தோறும் கலாசாரத் திணைக்களத்தின் மூலம் அரசின் உயர் விருதான கலாபூ'ணம் விருது வழங்கப்பட்டு வருவதுடன் இதற்கு இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் தனது பங்களிப்பினை நல்கி வருகின்றது. அதனடிப்படையில் இவ் விருதானது இவ்வருடம் மொத்தமாக 301 சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லீம் கலைஞர்களுக்கு வழங்கிக் கௌரவிக்கப்பட்டதில் 206 சிங்களக் கலைஞர்கள், 70 தமிழ்க் கலைஞர்கள் மற்றும் 25 முஸ்லீம் கலைஞர்கள் தேர்வு செய்யப்பட்டிருந்தனர். அதனடிப்படையில் விருது பெறுவதற்கு தகுதியான 70 தமிழ்க் கலைஞர்களும் திணைக்களம் நியமித்த மதிப்பீட்டு குழு மூலம் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

**படங்கள் - XIII**








15.12.2015 அன்று மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற கலாபூ'ணம் விருது வழங்கும் வைபவத்தின் போது

இவ் விருது வழங்கும் வைபவமானது 15.12.2015 செவ்வாய்க்கிழமை அன்று மஹரகம தேசிய இளைஞர் சேவைகள் சபையின் மாநாட்டு மண்டபத்தில் உள்நாட்டு அலுவல்கள், வயம்ப அபிவிருத்தி மற்றும் கலாசார அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஏ.டீ. நாவின்ன அவர்களின் தலைமையில் நடைபெற்றதுடன், சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ டி.எம். சுவாமிநாதன் அவர்கள் பங்குபற்றி சிறப்புரையாற்றியதுடன் கலைஞர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தார். எமது திணைக்களம் சார்பில் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களும் உதவிப்பணிப்பாளர் திரு.இ.கர்ஜின் அவர்களும் கலைஞர்களுக்கு விருது வழங்கி கௌரவித்தனர்.

இவ் விருது வழங்கும் வைபவத்தில் சிங்கள, தமிழ் மற்றும் முஸ்லீம் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன், இதில் தமிழ் பாடசாலை மாணவர்களின் சார்பில் கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி மாணவிகளின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது. இவ் வைபவத்தில் சுமார் 1000 கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்

## 7.0 இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தி

### 7.0 மூலதன செலவினத்தின் கீழ் ஆலயங்களுக்கான நிதியுதவி

### 7.1.1 இந்து ஆலயங்களுக்கு புனரமைப்புக்கான நிதியுதவி (வடக்கு)

வட மாகாணத்திலுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென மாவட்டங்களிலுள்ள 170 இந்து ஆலயங்களுக்கு பிரதேச செயலாளரினூடாக நிதியுதவி காசோலைகள் மூலம் வழங்கப்பட்டுள்ளன. இதற்காக ரூபா 28.9 மில்லியன் செலவிழிக்கப்பட்டது.

*அட்டவணை – 7 - ஐ*

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட தொகை ரூபா | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | மன்னார் | 4,500,000 | 21 |
| 02. | வவுனியா | 10,300,000 | 45 |
| 03. | கிளிநொச்சி | 6,700,000 | 29 |
| 04. | யாழ்ப்பாணம் | 4,000,000 | 50 |
| 05. | முல்லைத்தீவு | 3,700,000 | 25 |
| **மொத்தம்** | | **29,200,000** | **170** |

### 7.1.2 இந்து ஆலயங்களுக்கு புனரமைப்புக்கான நிதியுதவி (கிழக்கு)

கிழக்கு மாகாணத்திலுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென மாவட்டங்களிலுள்ள 106 இந்து ஆலயங்களுக்கு பிரதேச செயலாளரினூடாக ரூபா 20.5 மில்லியன் கீழே குறிப்பிட்டுள்ள மாகாணங்களுக்கு காசோலைகளாக வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 7 - II

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட தொகை ரூபா | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | திருகோணமலை | 11,500,000 | 20 |
| 2. | மட்டக்களப்பு | 6,000,000 | 60 |
| 3. | அம்பாறை | 3,000,000 | 26 |
| **மொத்தம்** | | **20,500,000** | **106** |

### 7.1.3 இந்து ஆலயங்கள், நிறுவனங்களுக்கு புனரமைப்புக்கான நிதியுதவி (வடக்கு, கிழக்கு தவிர்ந்த)

வடக்கு கிழக்கு தவிர்ந்த மாவட்டங்களிலுள்ள இந்து ஆலயங்களின் புனரமைப்பிற்கென 175 இந்து ஆலயங்களுக்கு பிரதேச செயலாளர் ஊடாக ரூபா 19.6 மில்லியன் செலவில் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை – 7 - III

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட தொகை ரூபா | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | பதுளை | 6,100,000 | 60 |
| 02. | கொழும்பு | 3,600,000 | 11 |
| 03. | காலி | 200,000 | 02 |
| 04. | களுத்துறை | 600,000 | 06 |
| 05. | கண்டி | 1,200,000 | 12 |
| 06. | குருணாகல் | 100,000 | 01 |
| 07. | மாத்தளை | 700,000 | 07 |
| 08. | நுவரெலியா | 4,300,000 | 46 |
| 09. | பொலநறுவை | 200,000 | 02 |
| 10. | கேகாலை | 1,500,000 | 17 |
| 11. | அநுராதபுரம் | 200,000 | 02 |
| 12. | மொனராகலை | 500,000 | 05 |
| 13. | புத்தளம் | 400,000 | 04 |
| **மொத்தம்** | | **19,600,000** | **175** |

### 7.1.4 இந்து ஆலயங்களுக்கான அடித்தள வசதி மேம்பாடு

நாட்டிலுள்ள இந்து ஆலயங்களின் அடித்தள வசதிகளினை மேம்பாடடையச் செய்யும் நோக்கத்திற்கமைய185 இந்து ஆலயங்களுக்கும், பொலநறுவையில் ஒரு அறநெறிப்பாடசாலையின் அடித்தள வசதி மேம்பாட்டிற்காகவும் ரூபா 16.85 மில்லியன் காசோலைகள் பிரதேச செயலாளர்களினூடாக வழங்கப்பட்டுள்ளன.

அட்டவணை – 7 - IV

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட தொகை ரூபா | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | கிளிநொச்சி | 900,000 | 08 |
| 02. | புத்தளம் | 450,000 | 05 |
| 03. | அம்பாறை | 1,800,000 | 20 |
| 04. | மட்டக்களப்பு | 1,240,000 | 22 |
| 05. | யாழ்ப்பாணம் | 2,880,000 | 30 |
| 06. | மன்னார் | 630,000 | 06 |
| 07. | திருகோணமலை | 1,350,000 | 11 |
| 08. | வவுனியா | 540,000 | 06 |
| 09. | மொனராகலை | 50,000 | 01 |
| 10. | பொலநறுவை | 630,000 | 06 (ஒரு அறநெறிப்பாடசாலை) |
| 11. | கண்டி | 540,000 | 06 |
| 12. | இரத்தினபுரி | 180,000 | 02 |
| 13. | கொழும்பு | 1,170,000 | 11 |
| 14. | பதுளை | 1,250,000 | 15 |
| 15. | காலி | 450,000 | 05 |
| 16. | களுத்துறை | 270,000 | 03 |
| 17. | கேகாலை | 450,000 | 05 |
| 18. | மாத்தறை | 810,000 | 09 |
| 19. | மாத்தளை | 540,000 | 06 |
| 20. | நுவரெலியா | 720,000 | 08 |
| **மொத்தம்** | | **16,850,000** | **185** |

### 7.1 மீண்டுவரும் செலவினத்தின் கீழ் இந்து ஆலயங்களுக்கான நிதியுதவி

### 7.2.1 கும்பாபிஷேகத்திற்கான நிதியுதவி

இந்து ஆலயங்களின் கும்பாபிஷேக வைபவத்திற்கென நிதியுதவியளிக்கும் செயற்பாட்டின் கீழ் 50 இந்து ஆலயங்களுக்கு ரூபா 1.72 மில்லியன் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை – 7 - V

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட தொகை ரூபா | ஆலயங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01. | யாழ்ப்பாணம் | 575,000 | 15 |
| 02. | நுவரெலியா | 175,000 | 06 |
| 03. | புத்தளம் | 75,000 | 03 |
| 04. | கேகாலை | 25,000 | 01 |
| 05. | முல்லைத்தீவு | 100,000 | 02 |
| 06. | கண்டி | 25,000 | 01 |
| 07. | இரத்தினபுரி | 25,000 | 01 |
| 08. | அம்பாறை | 70,000 | 03 |
| 09. | திருகோணமலை | 100,000 | 03 |
| 10. | மட்டக்களப்பு | 225,000 | 06 |
| 11. | காலி | 50,000 | 01 |
| 12. | களுத்துறை | 50,000 | 02 |
| 13. | மொனராகலை | 50,000 | 01 |
| 14. | பொலநறுவை | 25,000 | 01 |
| 15. | மாத்தறை | 50,000 | 02 |
| 16. | கிளிநொச்சி | 100,000 | 02 |
| **மொத்தம்** | | **1,720,000** | **50** |

படங்கள் - **XIV**



இழுப்பற்கடவை ஸ்ரீ சிவ முத்துமாரியம்மன் ஆலய கும்பாபிஷேக உற்சவம் - மட்டக்களப்பு



பாலாவி ஸ்ரீநாககாளியம்மன் ஆலய கும்பாபிஷேகம் புத்தளம்

## 7.2.2 இந்து சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களுக்கான நிதியுதவி

இந்து சிறுவர் மற்றும் முதியோர் இல்லங்களை பராமரிக்கும் நிறுவனங்களின் பணிகளை ஊக்குவிக்கும் வகையில் வருடந்தோறும் வழங்கப்படும் நிதியுதவித் திட்டத்தின் கீழ், இவ்வாண்டு பின்வரும் மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 38 முதியோர் மற்றும் இந்துச் சிறுவர் இல்லங்களுக்கு ரூபா 3.88 மில்லியன் செலவில் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 1483 பேர் பயனடைந்துள்ளனர்.

அட்டவணை – 7 - VI

| இல | மாவட்டம் | வழங்கப்பட்ட தொகை ரூபா | சிறுவர், முதியோர் இல்லங்களின் எண்ணிக்கை | பயனாளிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01. | மட்டக்களப்பு | 957,500 | 13 | 375 |
| 02. | மாத்தளை | 70,000 | 1 | 28 |
| 03. | கொழும்பு | 80,000 | 1 | 30 |
| 04. | அம்பாறை | 245,000 | 3 | 96 |
| 05. | முல்லைத்தீவு | 445,000 | 4 | 174 |
| 06. | யாழ்ப்பாணம் | 402,500 | 2 | 159 |
| 07. | வவுனியா | 347,500 | 4 | 135 |
| 08. | மன்னார் | 137,500 | 1 | 55 |
| 09. | திருகோணமலை | 247,500 | 5 | 95 |
| 10. | கிளிநொச்சி | 947,500 | 4 | 336 |
| **மொத்தம்** | | **3,880,000** | **38** | **1,483** |

படங்கள் - **XV**



மாத்தளை சாரதா மிஷன் சிறுவர் இல்லத்திற்கான நிதியுதவி

### 7.2.3 நந்திக் கொடிகள் அச்சிடலும் விநியோகமும்

வருடந்தோறும் திணைக்களத்தின் மூலம் இந்து ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களுக்கு நந்திக் கொடிகள் அச்சிட்டு 300 இந்து ஆலயங்களுக்கும், நிறுவனங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளன

அதனடிப்படையில் இவ்வாண்டு ரூபா 0.992 மில்லியன் செலவில் கொடிகள் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்பட்டுள்ள அதன் விபரங்கள் பின்வருமாறு:

அட்டவணை – 7 - VII

| இல | நந்திக் கொடிகளின் விபரங்கள் | கொடிகளின் மொத்த எண்ணிக்கை | அச்சிடப்பட்டுள்ள கொடிகளின் எண்ணிக்கை | விநியோகிக்கப்பட்ட கொடிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | பெரிய கொடிகள் 43’ஒ30’ | 2912 | 2912 | 2160 |
| 02 | தொங்கும் கொடிகள் 6’ ஒ2’ (இரு நந்திகள் உள்ளவை) | 1684 | 1684 | 822 |
| மொத்தம் | | **4,596** | **4,596** | **2,982** |

## 8.0 இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அதன் செயற்பாடுகள் தொடர்பான தரவுகள்

### 8.1 நிதி முன்னேற்ற நிலைமை 2015

அட்டவணை – 8 – I

| விபரம் | நிதி ஒதுக்கீடு 2015 (ரூ.மில்) | நிதி முன்னேற்றம் (ரூ.மில்) | மூ |
|---|---|---|---|
| மூலதனம் | 94.53 | 94.37 | 99.84 |
| மீண்டுவரும் | 127.95 | 126.77 | 99.07 |
| **மொத்தம்** | **222.48** | **221.14** | **99.40** |

### 8.2 பிரிவுகள் ரீதியிலான நிதி முன்னேற்றம் 2015

அட்டவணை – 8 – II

| இல. | பிரிவுகள் | நிதி ஒதுக்கீடு 2015 ரூ.மில் | நிதி முன்னேற்றம் ரூ.மில் | மூ |
|---|---|---|---|---|
| ஐ | இந்துசமய அறநெறிக்கல்வி அபிவிருத்தி | 38.11 | 38.06 | 99.86 |
| ஐஐ | இந்துசமய மேம்பாடு | 2.78 | 2.78 | 100 |
| ஐஐஐ | இந்து சமய ஆராய்ச்சி | 3.53 | 3.27 | 92.63 |
| ஐஏ | இந்து தமிழ் கலை கலாசார மேம்பாடு | 1.37 | 1.37 | 100 |
| ஏ | இந்து ஆலயங்கள் மற்றும் நிறுவனங்களின் அபிவிருத்தி | 92.60 | 92.44 | 99.82 |
| | மொத்தம் | **138.39** | **137.92** | **99.66** |

## பிரிவுகள் ரீதியிலான நிதி முன்னேற்ற வரைபு




8.3 திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள இந்து ஆலயங்கள், இந்துசமய நிறுவனங்கள், இந்து அறநெறிப் பாடசாலைகள் (2015 டிசம்பர் 31ஆம் திகதி வரை)

அட்டவணை – 8 – III

| இல. | மாவட்டம் | இந்து ஆலயங்கள்மற்றும் நிறுவனங்கள் | | இந்து அறநெறிப் பாடசாலை | | |
|---|---|---|---|---|---|---|
| | | ஆலயங்கள் | நிறுவனங்கள் | பாடசாலைகள் | ஆசிரியர்கள் | மாணவர்கள் |
| 01. | அனுராதபுரம் | 08 | 01 | 01 | 05 | 363 |
| 02. | பதுளை | 331 | 67 | 174 | 1021 | 17,010 |
| 03. | கொழும்பு | 192 | 163 | 94 | 807 | 10,514 |
| 04. | காலி | 21 | 01 | 08 | 12 | 346 |
| 05. | கம்பஹா | 21 | 21 | 13 | 42 | 2,203 |
| 06. | ஹம்பாந்தோட்டை | 01 | 00 | 00 | - | - |
| 07. | களுத்துறை | 113 | 17 | 61 | 204 | 1,341 |
| 08. | கண்டி | 330 | 73 | 152 | 545 | 20,037 |
| 09. | கேகாலை | 230 | 21 | 85 | 222 | 4,683 |
| 10. | குருணாகல் | 34 | 09 | 10 | 36 | 143 |
| 11. | மாத்தளை | 98 | 15 | 57 | 198 | 7,421 |
| 12. | மாத்தறை | 19 | 04 | 14 | 31 | 653 |
| 13. | மொனராகலை | 27 | 06 | 05 | 15 | 121 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 14. | நுவரெலியா | 621 | 115 | 156 | 583 | 14,663 |
| 15. | புத்தளம் | 69 | 36 | 45 | 198 | 2,534 |
| 16. | பொலநறுவை | 15 | 06 | 06 | 23 | 968 |
| 17. | இரத்தினபுரி | 246 | 37 | 110 | 317 | 12,272 |
| 18. | அம்பாறை | 193 | 111 | 117 | 958 | 17,103 |
| 19. | மட்டக்களப்பு | 899 | 310 | 234 | 1,560 | 30,218 |
| 20. | யாழ்ப்பாணம் | 1558 | 318 | 259 | 1,130 | 18,345 |
| 21. | கிளிநொச்சி | 202 | 19 | 72 | 198 | 5,514 |
| 22. | முல்லைத்தீவு | 240 | 16 | 58 | 271 | 5,069 |
| 23. | மன்னார் | 129 | 37 | 75 | 272 | 1,053 |
| 24. | திருகோணமலை | 292 | 85 | 115 | 681 | 32,138 |
| 25. | வவுனியா | 382 | 33 | 79 | 429 | 6,101 |
| | **மொத்தம்** | **6,271** | **1,521** | **2,000** | **9,758** | **191,813** |

### 8.4 ஆளணி விபரம் - 2015 (2015 டிசம்பர் 31ஆம் திகதி வரை)

அட்டவணை – 8 – IV

| **இல** | **பதவி** | **அனுமதிக் கப்பட்ட ஆளணி** | **தற்போதுள்ள ஆளணி** | **வெற்றிடமாகவுள் ள ஆளணி** |
|---|---|---|---|---|
| 1. | பணிப்பாளர் | 01 | 01 | 00 |
| 2. | பிரதிப் பணிப்பாளர் (இ.நி.சே) | 01 | 00 | 01 |
| 3. | கணக்காளர் | 01 | 01 | 00 |
| 4. | உதவிப்பணிப்பாளர் (இ.நி.சே) | 02 | 01 | 01 |
| 5. | உதவிப்பணிப்பாளர் (இ.நி.சே அல்லாத) | 01 | 01 | 00 |
| 6. | நிர்வாக உத்தியோகத்தர் | 01 | 00 | 01 |
| 7. | நூலகர் | 01 | 01 | 00 |
| 8. | ஆராய்ச்சி அலுவலர் | 01 | 01 | 00 |
| 9. | அபிவிருத்தி உதவியாளர் | 16 | 18 | 00 |
| 10. | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 111 | 73 | 38 |
| 11. | கலாசார உத்தியோகத்தர் | 02 | 01 | 00 |
| 12. | அரச முகாமைத்துவ உதவியாளர் | 21 | 15 | 06 |
| 13. | இந்து யாத்திரிகர் விடுதி முகாமையாளர் | 01 | 01 | 00 |
| 14. | இந்து யாத்திரிகர் விடுதி உதவி முகாமையாளர் | 01 | 01 | 00 |
| 15. | சாரதி | 03 | 02 | 01 |
| 16. | இந்து கலாசார உதவியாளர் | 02 | 02 | 00 |
| 17. | தரவு நிரற்படுத்துனர் | 01 | 00 | 01 |
| 18. | கலாசார சேவையாளர் | 03 | 03 | 00 |
| 19. | அலுவலகப் பணியாளர் | 08 | 07 | 01 |
| 20. | பாதுகாப்பு அலுவலர் (இந்து யாத்திரிகர் விடுதி) | 01 | 01 | 00 |
| 21. | காவலாளி | 04 | 03 | 01 |
| 22. | அறை பராமரிப்பாளர் (இந்து யாத்திரிகர் விடுதி) | 05 | 01 | 04 |
| **மொத்தம்** | | **188** | **134** | **55** |

## 9.0 இந்துப் பண்பாட்டு நிதியம்
### 2015ஆம் ஆண்டிற்கான செயற்திட்ட அறிக்கை

**9.1 அறிமுகம்**

இந்துப்பண்பாட்டு நிதியம் 1985ஆம் ஆண்டின் 31ஆம் இலக்க சட்டத்தின் மூலம் இந்துசமய கலாசார விடயங்களைச் சுதந்திரமாக முன்னெடுப்பதற்கென ஆரம்பிக்கப்பட்டது. இதில் 3 உத்தியோகபூர்வ அங்கத்தவர்களும் கௌரவ அமைச்சரால் 5 பேரும் அங்கத்தவராக நியமிக்கப்படுவர். 2015ஆம் ஆண்டு பின்வருவோர் இந்நிதியத்தின் அங்கத்தவர்களாக உள்ளனர்

**தலைவர்.**

திருமதி என் ரஞ்சினி,
புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் இந்து விவகார அமைசின் செயாலாளர்

**பிரதம நிர்வாக உத்தியோகத்தர்**

திரு உமாமகேஸ்வரன், பணிப்பாளர்,
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**கணக்காளர்**

திரு.எம்.ஜி.காண்டீபன்,கணக்காளர்
இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்

**உறுப்பினர்கள்**

01. திருமதி கே. ஹேமலோஜினி,உதவிப் பணிப்பாளர்,இந்து சமய கலாசார அலுவல்கள திணைக்களம்.
02. திரு. எஸ்.தில்லைநடராஜா
03. திரு. வி. கனகசபாபதி
04. திரு. கே. பரமலிங்கம்
05. திரு. எம். கணபதிப்பிள்ளை
06. கே.டி. துரைசாமி

**9.2 நிதி நிலை**

- இலங்கை வங்கியில் 31.12.2015ஆம் திகதி அன்று நடைமுறைக் கணக்கில் ரூ1.34 மில்.மிகுதியாக உள்ளது.
- இலங்கை வங்கியில் 31.12.2015ஆம் திகதி அன்று நிலையான வைப்புக் கணக்கில் ரூ21.83மில்.மிகுதியாக உள்ளது.

**9.3 இந்துப் பண்பாட்டு நிதியம் - செயற்றிட்டங்கள் 2015**

அட்டவணை –9 – I

| செயற்பாடுகள் | நிதி ஒதுக்கீடு 2015 (ரூ.மில்) | முன்னேற்றம் - 2015.01.01 திகதி முதல் 2015.12.31 வரை | |
|---|---|---|---|
| | | நிதி முன்னேற்றம் | பௌதீக முன்னேற்றம் |
| 01. இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களிற்கான நிதியுதவி | 0.5 | 0.25 | 01. திருமுறிகண்டீஸ்வரர் ஆலயம் புனரமைக்கப்பட்டது. |
| 02. கோவில் காளை மாட்டிற்கான பராமரிப்பு | 0.060 | 0.060 | 02. நகுலேஸ்வரர் ஆலயத்திலுள்ள காளை மாட்டிற்கான நிதியுதவி |
| 03. இந்து அறநெறி ஆசிரியர்களுக்கான சீருடைத்துணி | 1.20 | 1.15 | 03. 1200 சீருடைத்துணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. |

## 10.0 திணைக்களத்தின் அடைவுகள்

### 10.1 தேசிய உற்பத்தித்திறன் விருது 2014

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் தேசிய மட்டத்தில் இரண்டாமிடம்**

பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் கீழ் இயங்கும் "தேசிய உற்பத்தித்திறன் விருது 2014" போட்டியில் திணைக்களங்கள் பிரிவில் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் இரண்டாமிடம் பெற்றுள்ளது. இப் போட்டியில் முதற் தடவையாகப் பங்குபற்றிய இத் திணைக்களமானது சகல அலுவலர்களினதும் ஒன்றுபட்ட கடின உழைப்பினால் முதற் தடவையிலேயே தேசியமட்டத்தில் இரண்டாமிடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. அலுவலர் அர்ப்பணிப்பு, தலைமைத்துவம், அலுவலகமுகாமை, பொதுமக்கள் பட்டய அமுலாக்கம், சேவை வழங்கல் எனப் பலவேறு விடயங்கள் பரிசீலிக்கப்பட்டதனடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு தேசியமட்டத்தில் இரண்டாமிடத்தினைப் பெற்றுள்ளது. திணைக்களம் ஆரம்பிக்கப்பட்டு 30 ஆண்டுகள் நிறைவினைக் கொண்டாடவுள்ள இவ்வேளையில் இவ்விருது திணைக்களத்தின் எதிர்கால செயற்பாடுகளிற்கு ஊக்கத்தை வழங்குகின்றது. மேலும் திணைக்களம் வாடிக்கையாளர்களிற்கான சேவைத் தரத்தை மேம்படுத்தி சர்வதேச தரச் சான்றிதழை பெறுவதற்கான ஆரம்ப கட்ட செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

இவ் விருது வழங்கும் வைபவம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 15.12.2015 செவ்வாய்க்கிழமை அன்று இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசின் கௌரவ பிரதமர் திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இதில் எமது திணைக்களத்திற்கான விருதான கேடயத்தினையும் சான்றிதழையும் பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சர் கௌரவ ஆர். எம். மத்தும பண்டார அவர்கள் எமது திணைக்களப் பணிப்பாளர் திரு. அ. உமாமகேஸ்வரன் அவர்களுக்கு வழங்கிக் கௌரவித்தார்.

*படங்கள் - XVI*









பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் 15.12.2015 இல் நடைபெற்ற "தேசிய உற்பத்தித்திறன் விருது 2014"வழங்கும் வைபவத்தின்போது....

### 10.2 தேசிய உற்பத்தித் திறன் விருதிற்கான பாராட்டு வைபவம்

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் கௌரவ னு.ஆ. சுவாமிநாதன் அவர்களின் வழிப்படுத்தலிலும், அமைச்சின் செயலாளர் திரு. ஏ.சிவஞானசோதி அவர்களின் நெறிப்படுத்தலிலும், திணைக்களத்தின் பணிப்பாளர் திரு. அ. உமாமஹேஸ்வரன் அவர்களின்

தலைமைத்துவத்திலும் இயங்கிவரும் இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களமானது 2014 ஆண்டிற்கான "தேசிய உற்பத்தித்திறன் விருது" போட்டியில் திணைக்களங்கள் பிரிவில் இரண்டாமிடம் பெற்றமையை முன்னிட்டு, திணைக்களக் குழாத்தினரின் சேவையை பாராட்டும் முகமாக 31.12.2015 வியாழக்கிழமை அன்று கௌரவ அமைச்சர் அவர்களினது தலைமையில் திணைக்களத்தின் கோட்போர்கூடத்தில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தில் கௌரவ அமைச்சரினாலும், அமைச்சின் செயலாளர் திரு,ஏ.சிவஞானசோதி அவர்களினாலும் மற்றும் திணைக்களத்தின் நிர்வாகத்தில் இயங்கிவரும் பாணந்துறை அருள்மிகு ஸ்ரீ கந்தசுவாமி கோவிலின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ டு. ஜெகதீஷ்வரக்குருக்கள் அவர்களினாலும் உத்தியோகத்தர்கள் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்

படங்கள் - **XVII**













"தேசிய உற்பத்தித்திறன் விருது" போட்டியில் திணைக்களங்கள் பிரிவில் இரண்டாமிடம் பெற்றமையை முன்னிட்டு, திணைக்களக் குழாத்தினரின் சேவையை பாராட்டும் முகமாக 31.12.2015 அன்று கௌரவ அமைச்சர் அவர்களினது தலைமையில் திணைக்களத்தின் கோட்போர் கூடத்தில் நடைபெற்ற பாராட்டு வைபவத்தின் போது..